**போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்டம் - 2023**

---

போக்குவரத்து செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 3425-SRI (SF) ஆம் இலக்க 2017 ஒக்தோபர் 28 ஆந் திகதிய தொழில்நுட்ப உதவி கடன் உடன்படிக்கையின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலப்பகுதி என்பன**

சாத்தியவள ஆய்வு, விபரமான வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம் வீதிகள், புகையிரப் பாதைகள் மற்றும் துறைமுக உபதுறைகளிலுள்ள முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டங்களின் ஆரம்பிக்கும் வினைத்திறனை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது வீதிகள், புகையிரப்பாதைகள் மற்றும் துறைமுகங்கள் என்ற மூன்று (03) கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யூ.எஸ் டொலர் 27.7 மில்லியனுக்குச் சமமான எஸ்டீஆர் 17.471 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 3,655.43 மில்லியனுக்கச் சமமான யூஎஸ் டொலர் 24.42 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு செய்யப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 28 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 ஆந் திகதியளவில் வீதிக் கூறினை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைமகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமிமை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட நிருவாகக் கையேட்டின் பிரிவுகள் 58 மற்றும் 59 | செயற்திட்டத்தினை பௌதீகரீதியாக பூர்த்திசெய்யும் திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் செயற்திட்ட பூர்த்தி அறிக்கையினை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு (ADB) வழங்குதல் வேண்டும். எனினும் அவ்வாறான அறிக்கையினை இந்த அறிக்கைத் திகதி வரை ஆசிய அபிவிருத்தி வங்கிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | TPPF இன் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டு முறைப்படியாக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பிவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டது. | செயற்திட்ட நிருவாக கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கையினை உள்ளடக்கிய தொடர்புபட்ட ஆவணத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

| கூறு | நடவடிக்கை | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு அவதானிப்புக்கள் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகு/சதவீதம் | அடைந்துகொள்ளப்பட்ட செயலாற்றல் அலகு/ சதவீதம் | | |
| சர்வதேச PPP பெறுகை ஆலோசகர் | மதியுரை வேலை | 100 | 75 | ஒப்பந்தக்காரரினால் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் இவ்வேலைக்கான ரூபா 17.36 மில்லியன் கொடுப்பனவு செயற்திட்டத்தின் இறுதியில் விளைவற்றதாக இருந்தது. | புதிய களணி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையுமான செயற்திட்டத்தின் உயர்தரப்பட்ட நெடுஞ்சாலையினை இடைநிறுத்துவதற்கு வரிசை அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தில் பதில்** | சர்வதேச ॰ பெறுகை ஆலோசகரின் ஈடுபாடானது இனி தேவையற்றதாக இருந்தது. எனவே தவிர்க்க முடியாத சூழ் நிலையின் காரணமாக சர்வதேச ॰ பெறுகை ஆலோசகரின் சேவையை இடைநிறுத்துவது நியாயமானதாகும். |
| **கணக்காய்வாளரின் சிபாரிசு** | குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஆலோசனை வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒரு செயற்திட்டத்தின் கீழுள்ள ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட கூறுகளை அமுல்ப்படுத:துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத வளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வீதிக் கூறுக்காக யூ.எஸ் 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்யும் வரை யூ.எஸ் டொலர் 2.55 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் (PMU) பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. TPPF செயற்திட்டத்தின் வீதிக் கூறானது அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தினையும் SASEC துறைமுக உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைகளின் வடிவமைப்பினையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் அதிவேக வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் தொடக்க மற்றும் விபரமான பொறியியல் வடிவமைப்பானது அதிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அடையாளங்காணப்படவில்லை. எனவே யூ.எஸ் டொலர் 10 மில்லியனில் யூ.எஸ் டொலர் 6.9 மில்லியன் பெறுமதியான பிரதான கூறு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2022 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மத்திய தவணை மீளாய்வு தூதுக் குழுவிற்கு இணங்க மிகுதியாக உள்ள சலுகைக் கடன் மீதியினைப் பயன்படுத்துவதற்கான புதிய பணி ஒப்படையின் விபரத்தினை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கும் வரை கடனை வைத்திருப்பதற்கு தூதுக்குழு எதிர்பார்த்து. அவ்வாறு செய்வதற்கு பெருந்தெருக்கள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இணங்கியிருந்த போதிலும் செயற்திட்டம் முடிவடையும் வரை புதிய பணி ஒப்படைக்கான பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>ஆகவே யூ.எஸ் டொலர் 7.45 மில்லியன் சலுகைக் கடன் மீதி பயன்படுத்தப்படாதிருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினை மூடுகையில் மீளளிப்புச் செய்யப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு செயற்திட்ட பிரேரணையானது தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (NPD) அவர்களின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது 2022 சனவரி 20 ஆந் திகதி NPD இனால் அங்கீகரிக்கப்பட்டது. எனினும் 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய பணி ஒப்படையும் பிரேரணைகளும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வீதித் துறையின் உள்ளபடியான வேண்டுதல்களுக்காக வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கடன் தொகைக்குள் அடையாளம் காணப்பட்ட வேலையை பூர்த்திசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |